மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, ஒவ்வொருவருக்கும் ஒரு விழுக்காடு என்ற விதத்திலே அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து அதன் மூலம்வேலை வாய்ப்பு அளித்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து நல்ல கருத்தாக இருக்கிறது. அதுபற்றி அரசு பரிசீலித்து எப்படிச் செய்ய முடியும் என்பதை ஆராயும்.

திரு. ப. தீர்த்தராமன்: தலைவர் அவர்களே, இந்த ஒதுக்கீடு தனியார் துறையிலும் அளிக்க அரசு முன வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, தனியார் துறையிலே அவர்களுக்கு இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: தலைவர் அவர்களே, உடல் ஊன முற்றவர்களுக்கு மூன்று விழுக்காடு வேலை வாய்ப்பு சென்ற ஆண்டு முதல் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சென்ற ஆண்டு மதுரை மாவட்டத்திலே அப்படி கொடுக்கப்பட்ட 14 ஊனமுற்றவர்களை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்களே, அவர்களுக்கு வேலை கொடுக்க அரசு முன் வருமா? அந்த மாவட்ட கழகத்திற்கு உத்தரவிட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்க இயலும்.

ஊனமுற்றோர்களுக்காக தொழிற்பள்ளிகள் மற்றும் பள்ளிகளை மாவட்ட ரீதியாக அமைக்கும் திட்டம்.

*வினா எண். 752— திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உடல் ஊனமுற்றோர்கள் தொழிற் பள்ளிகள்—பள்ளிகள் மாவட்ட ரீதியாக அமைக்கும் யோசனை உண்டா?

(ஆ) ஆம் எனில், இப்பணிக்காக மாவட்ட ரீதியாக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) தமிழகத்தில் ஊன முற்றோர்களுக்காக தொழில் பள்ளிகளை மாவட்ட ரீதியாக அமைக்கும் யோசனை தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் காது கேளாதவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்

காக மதுரையிலும் கிண்டியிலும் தொழிற் பயிற்சி நிறுவனத்தில் பொருத்துபவர் மற்றும் மின் கம்பியாள் தொழில்களில் தனிப்பிரிவு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. மேலும் தமிழ் நாட்டில் பெரியார் மற்றும் செங்கல்பட்டு ஆகிய இரு மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் பார்வையற்றோர் பள்ளிகள் இயங்குகின்றன. இதைத் தவிர எல்லா மாவட்டங்களிலும் காது கேளாதோர் பள்ளிகளும் உள்ளன. மேலும் சென்னை, மதுரை ஆகிய இரு மாவட்டங்களிலும், முடவர்களுக்காக ஒவ்வொரு பள்ளியும் சித்த சுவாதீனமுற்றோர்க்கென ஒவ்வொரு பள்ளியும், தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தொழுநோய் பிடித்தோருக்கான பள்ளி ஒன்றும், மற்றும் சென்னையில் இரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும், உடல் ஊனமுற்றோருக்காக இயங்குகின்றன.

(ஆ) 1981-82 ஆம் ஆண்டில் இப்பள்ளிகளுக்காக ரூ.33.35 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபொழுது பள்ளிகள் இருக்கின்றன, பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். ஆனால், கொடுக்கப்பட்ட பிறகும் மறுவாழ்வு அளிக்கும் வகையில் உத்தியோகம் கொடுக்கப்படவில்லை, ஒரு சிலருக்கு கொடுக்கப்பட்டு, இரண்டு மூன்று மாதங்களில் அவர்கள் நீக்கப்பட்டும் இருக்கிறார்கள். இவைகள் அரசுக்குத் தெரியுமா? வருங்காலத்திலே உடனடியாக நடவடிக்கை எடுத்து, இப்படி நீக்கப்பட்டவர்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்க அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பள்ளியில் படித்த மாணவர்கள் அனைவருக்கும் உத்தியோகம் கொடுத்துக் கொண்டு வருவதுதான் இந்த அரசினுடைய கொள்கையாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்த மாணவர்கள் வேலை வாய்ப்பு இன்றி கஷ்டப்படுவதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதைப் பற்றிய விவரம் ஒன்றும் இல்லை. யார் என்று அவர்கள் என்னிடம் குறிப்பிட்டால், அவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும்.

செல்வி ப. விசயலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 1981–82 ஆம் ஆண்டில் உடல் ஊனமுற்றோர்கள் தொழில் பள்ளிகளின் மூலம் எத்தனை பேர்கள் பயன் அடைகிறார்கள் என்பதையும் ஒரு மாதத்திற்கு உணவுக்காக எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 198 -82 ஆம் ஆண்டு 4,400 மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர். அவர்களுக்கு உணவுக்காக, மாதம் ரூ 36 ஒதுக்கப்பட்டுள்ளது.

தீவிரகால்நடை அபிவிருத்தி செயற்கைமுறை கருவூட்டும் பணியை விரிவாக்கும் திட்டம்.

*வினா எண் 753—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுமையும் தீவிர கால்நடை அபிவிருத்தி செயற்கை முறை கருவூட்டும் பணி விரிவாகச் செய்யப்பட திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தற்சமயம் ஏதும் இல்லை.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தீவிர கால்நடை அபிவிருத்தி செயற்கை முறை கருவூட்டும் பணியை அரசு எந்தத் திட்டத்தின் அடிப்படையில் செயல் படுத்துகிறது? தமிழகம் முழுவதும் கால்நடை அபிவிருத்தி செயற்கை முறை கருவூட்டும் பணி அமுல்படுத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டம் விஞ்ஞான ரீதியான இனவிருத்தி வசதிகள், நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை பணிகள் ஆகியவற்றை அளித்து பால் உற்பத்தி பெருக்குவது, தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு திட்டமும் 50,000 பசுக்கள் மற்றும் எருமைகள் கொண்ட 50 கால்நடைக் கிளை நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் தமிழகத்தில் 9 இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருச்சி, மதுரை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி. வாடிப்பட்டி, உசிலம்பட்டி, தாம்பரம் மற்றும் பண்ருட்டி ஆகிய இடங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எத்தனை இடங்களில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது? மேலும் தஞ்சை மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை விரிவாக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.